Registered as a Newspaper

பெண்மைக்கு மெருகேற்றும்
இளமைக்கு எழிலூட்டும்
தரமான
தங்க நகைகளை
அளிப்பவர்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்நகர்.
தொலைபேசி: 23628

உதயன்

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

விலை:
ரூ. 1-25

புதுமையான
22 KT
தங்க நகைகளை
ஆடர் செய்து
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
தொலைபேசி: 23628

சுடர் 2 யாழ்ப்பாணம் பிரபவ ஹூ சித்திரை மீ 23 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1407 றம்ழான் பிறை 07 (06.05.1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 136

★ யாழ். ஆஸ்பத்திரி மூடப்படுவதை நிறுத்தும் முயற்சியில்

விசேட குழு கொழும்பு விரைகிறது



யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியை நாளை மறுதினம் எட்டாம் திகதியுடன் மூடிவிடுமாறு அரசு விடுத்த உத்தரவை வாபஸ் பெறக்கோரி வைத்தியசாலைப் பணிப்பாளர் தலைமையில் ஆஸ்பத்திரி வைத்தியர்கள், ஊழியர்கள் தாதிமார்கள் செயலகம் நோக்கி ஊர்வலமாகச் சென்றபொழுது எடுக்கப்பட்ட படங்களை மேலே காணலாம். (படம்: ஜெயம்)

பெரும் கண்டன ஊர்வலம் நகரில் நேற்று நடந்தது

— அலுவலகச் செய்தியாளர்: ரே. இரத்தினராஜசிங்கம் —

யாழ்ப்பாணம், மே. 6

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி மூடப்படுவதை நிறுத்தும் முயற்சியில், அரசாங்க உயர் பீடத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஐவர் கொண்ட விசேட குழு ஒன்று அவசரமாக இன்று கொழும்பு விரைகிறது.

அரசாங்க அதிபர் தலைமையில் செல்லும் விசேட குழுவில் யாழ். ஆஸ்பத்திரி பணிப்பாளர், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத் தலைவர், மற்றும் பிரஜைகள் குழுக்களின் பிரதிநிதி ஆகியோர் அங்கம் வகிப்பர்

இவர்கள் முதலில் போதனா ஆஸ்பத்திரிகள் அமைச்சர் திருமதி சந்திரா ரணசிங்காவையும், ஜனாதிபதி ஜெயவர்த்தனாவையும் சந்தித்து ஆஸ்பத்திரியை மூடுவது என்ற முடிவை மீள்பரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்வர்.

யாழ் ஆஸ்பத்திரியை மூடுவதால் மக்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்பு (4ஆம் பக்கம் பார்க்க)

ஊழியர் பகிஷ்கரிப்பை அடுத்து

அரச அலுவலகங்கள் நேற்று ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், மே 6

யாழ் அரச செயலகம் உட்பட அனைத்து அரச அலுவலகங்களையும் நேற்று ஊழியர்கள் பகிஷ்கரித்தனர்

யாழ் ஆஸ்பத்திரியை மூடுமாறு ஸ்ரீலங்கா அரசு விடுத்த உத்தரவை வாபஸ் பெறக்கோரியே ஊழியர்கள் பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அரச அலுவலகங்கள் முன்பாக அரசுக்கு எதிரான சுலோக அட்டைகளும் கட்டித் தூக்கப்பட்டிருந்தன

இதே வேளை யாழ் நகர் நேற்றும் வெறிச்சோடியது கடைகள் மூடப்பட்டிருந்தன வங்கிகள் இயங்கவில்லை வாகனப்போக்குவரத்து (4ஆம் பக்கம் பார்க்க)

● மாவை இறக்காமல் கப்பல் திரும்பியது

காங்கேசன்துறைக்கு மாவு கொண்டுவந்த கப்பல் மாவை இறக்காமலேயே திரும்பிச் சென்றது.

அண்மையில் துறைமுக ஊழியர் சிலரை இராணுவத்தினர் சுட்டுக் கொன்றதை அடுத்து துறைமுக ஊழியர்கள் தற்போது கடமைக்குச் செல்வதில்லை.

கப்பலில் இருந்து மா மூடைகளை இறக்கத் தொழிலாளர்கள் இல்லாததாலேயே கப்பல் திருப்பிச்செல்ல நேரிட்டது

இதேவேளை இராணுவத்தினருக்கென கப்பலில் கொண்டுவரப்படும் பொருட்கள் இராணுவத்தால் தடுத்துவைக்கப்படும் இளைஞர்களைக் கொண்டு இறக்குவிக்கப்படுகின்றன. (இ-10)

கைதிகள் பரிமாற்றத்தின்போது

விடுவிக்கப்பட்ட காமினி வீரமரணம்

யாழ்ப்பாணம், மே 6

யுத்தக் கைதிகள் பரிமாற்றத்தின் போது ஸ்ரீலங்கா அரசினால் விடுதலை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி காமினி நேற்று முன்தினம் வீரமரணம் அடைந்தார்

திங்கட்கிழமை இரவு பத்துமணி அளவில் முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமில் இருந்து புறப்பட்ட இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே வந்தாறுமூலையில் நடைபெற்ற நேரடி மோதலின் போதே இவர் வீரமரணமடைந்தார் இவருடன் தாசன் என்ற போராளியும் வீரமரணம் அடைந்தார்

இராணுவ தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். (உ-10)

கிளர்ச்சி நடத்த ஜே.வி.பி. திட்டம்

கதைவிடுகிறார் ஜனாதிபதி

கொழும்பு மே 6

1971 கிளர்ச்சி போன்ற ஒன்றை மீண்டும் நடத்த ஜனதா விமுக்தி பெரமுன (ஜே வி பி.) திட்டமிட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி ஜெயவர்த்தனா அறிவித்திருக்கிறார்

அரசாங்க பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் பேசுகையில் ஜனாதிபதி ஜெயவர்த்தனா இத்தகவலை நேற்று வெளியிட்டார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனா மேலும் சொன்னதாவது:-

அரசியல் தலைவர்கள், அமைச்சர்கள், எம் பிக்கள், அரச உயர் அதிகாரிகள் ஆகியோரைக் கொல்லும் திட்டம் ஒன்றையும் ஜே வி. பியினர் தயாரித்து இருந்தனர் எனவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வடபகுதித் தீவிரவாதிகளுடன் இணைந்து (4 ஆம் பக்கம் பார்க்க)

பட்டதாரி மாணவர்கள் 8 பேர் கைது!

கொழும்பு, மே 6

கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்தின் சுவரில் அரசு எதிர்ப்புச் சுவரொட்டிகளை ஒட்டிய எட்டுப் பட்டதாரி மாணவர்களை கறுவாக்காட்டுப் பொலிஸார் கைது செய்தனர். (இ-எ)

லலித் வருகைக்குச் சற்றுமுன்

விமானத்தள ஓடுபாதை ஈரோஸ் தாக்குதலில் சேதம்

முல்லைத்தீவில் சம்பவம்

புதிய இராணுவ விமானத் தளம் ஒன்றை திறந்து வைப்பதற்காக ஸ்ரீ லங்காவின் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி முல்லைத்தீவிற்கு நேற்று வருகை தர இருந்த போது அந்த விமான நிலைய ஓடு பாதையும், காவல் அரண் ஒன்றும் பலத்த சேதமாக்கப்பட்டது

82 எம். எம்: மோட்டார் தாக்குதல் மூலம் இந்த சேதங்களை தாங்கள் ஏற்படுத்தியதாக ஈரோஸ் அமைப்பு அறிவித்திருக்கிறது.

இதனால் லலித் அத்துலத்முதலியை ஏற்றி வந்த தரையிறங்க முற்பட்ட பொம்பர் விமானமும், பயணிகள் விமானம் ஒன்றும் தரை இறங்காமல் திரும்பி விட்டன என்றும் -

இத் தாக்குதலில் இறந்தவர்கள் - காயம் அடைந்தவர்கள் விபரம் இதுவரை கிடைக்கவில்லை என்றும் ஈரோஸ் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது (உ)

சுபநேரம்
06-05-1987
புதன்கிழமை
சுபநேரம்:-
4-26 முதல் 5-56 வரை
ராகுகாலம்:-
11-56 முதல் 1-26 வரை
இவை பகலுக்கு
இரவுக்கும் பொருந்தும்
அட்டமி முன்னிரவு
7.07 வரை

வானின் கூரைமீதிருந்த பயணிகள் மீது ஹெலிசூடு

கோப்பாய் பாலத்தில் இருவர் பலி!

யாழ்ப்பாணம், மே. 6

பயணிகள் சென்று கொண்டிருந்த வான் மீது ஹெலிக்கொப்டர் நடத்திய தாக்குதலில் வயோதிபர் ஒருவரும் இளைஞர் ஒருவரும் கொல்லப்பட்டனர். மூன்று பேர் காயமடைந்தனர்

நேற்றுக்காலை பத்து மணி அளவில் கோப்பாய்-கைதடி பாலத்துக்கு அருகாமையில் இச் சம்பவம் நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கேரதீவு நோக்கி சென்று கொண்டிருந்த சிறிய பயணிகள் வானின் கூரை மீதும் பயணிகள் ஏறிப் பயணம் செய்து கொண்டிருந்தனர்.

காலஞ்சென்ற இருவரும் காயமடைந்தவர்களும் வானின் கூரையில் இருந்து வந்தபொழுதே ஹெலிக்கொப்டர் தாக்குதலுக்கு இலக்கானனர்.

ஹெலிக்கொப்டர் தாக்க ஆரம்பித்த சம (4ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முனி



தேர்தலை ஒத்திப்போட்டு சர்வாதிகாரியாக மாறுகிறதுக்கு உப்பிடித் திடீர், திடீர் கண்டுபிடிப்புகள் கட்டாயம் அவசியம் தான் அதில சந்தேகம் இல்லையப்பா...!

முல்லைத்தீவில் ஷெல்லடி! இருவர் பலி!!

யாழ்ப்பாணம், மே 6

முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்து நேற்றும் காலை பயங்கர ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ள பட்டன

இதன் காரணமாக இரண்டு பேர் கொல்லப்பட்டனர் பலர் காயமடைந்தனர்

பல வீடுகளும் கடைகளும் சேதமடைந்தன.

இறந்தவர்களில் ஒருவர் எஸ். கணபதிப்பிள்ளை (வயது 35 முல்லைத்தீவு (4 ஆம் பக்கம் பார்க்க)

திறப்புவிழாவும் மூடுவிழாவும் ஒரே திகதியில்

யாழ்ப்பாணம் மே. 6

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி 1907 ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் திகதி திறக்கப்பட்டது

நாளை மறுதினம் 8ஆம் திகதியே அதன் மூடுவிழாவுக்கும் உத்தரவிட்டுள்ளது ஸ்ரீ லங்கா அரசு

நாளை மறு தினம் 8ஆம் திகதியுடன் ஆஸ்பத்திரி 80 ஆண்டைப் பூர்த்தி செய்கிறது (இ-10)

யாழ் ஆஸ்பத்திரி மூடப்படுவது ஏன்?

அமைச்சு தரும் விளக்கம்

கொழும்பு, மே 5

யாழ். போதனா ஆஸ்பத்திரியைச் சுற்றியுள்ள பிரதேசத்தை சண்டை தவிர்ப்புப் பிரதேசமாக பிரகடனப் படுத்துவது முடியாத காரியம்.

அதனால்தான் ஆஸ்பத்திரியை தற்காலிகமாக மூடுவது என்ற முடிவு எடுக்கப்பட்டு உள்ளது.

இப்படி போதனா ஆஸ்பத்திரிகள் அமைச்சு அறிவித்து உள்ளது

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் டாக்டர் இரத்தினப்பிரியா தெரிவிக்கையில் "ஆஸ்பத்திரியை மூடுவது என்ற முடிவு எம்முடன் கலந்தாலோசிக்கப்படாமல் எடுக்கப்பட்டதொன்று" -என்று தெரிவித்தார் (இ-எ)

அறிவித்தல்

ஷப்ரு நிதி நிறுவனம்

சகல வாடிக்கையாளர்களுக்கும்,

பாதுகாப்பான ஓர் இடத்திற்கு எமது அலுவலகத்தை மாற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்வதற்காக 207, மின்சார நிலைய வீதியில் உள்ள எமது தற்போதைய அலுவலகம் ஓரிரு தினங்களுக்கு மூடப்பட்டிருக்கும் என்பதை அறியத்தருகிறோம். மிகவிரைவில் புதிய அலுவலகம் அமைந்துள்ள இடம் குறித்து பத்திரிகைகளில் அறிவிக்கப்படும்.

பொது முகாமையாளர்
ஷப்ரு நிறுவனம்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

சின்னஞ் சிறு விளம்பரங்கள்

தவறிவிட்டது

சைக்கிள் தவறிவிட்டது. C N 80537 இலக்கமுடைய றலி சைக்கிள் பரந்தனில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் நா. இராசநாயகம் 70/11, இராசசிங்கம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (1849)

கந்தசாமி மீனலோசனி ஆகிய எனது அடையாள அட்டை (596740 944V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 385, நந்தாவில், கொக்குவில். (1802)

குண்டு வெடித்த அதிர்ச்சியால் மரணமான பெண்

அச்சுவேலி, மே 6

பருத்தித்துறையில் இராணுவத் தாக்குதலுக்கு அஞ்சி இடம்பெயர்ந்து அச்சுவேலியில் வசித்துவந்த பெண் ஒருவர் குண்டுச் சத்தத்தின் அதிர்ச்சியால் மரணமடைந்தார்.

திருமதி சுந்தரையா சிவபாக்கியம் 55 வயது பருத்தித்துறையில் இருந்து இடம்பெயர்ந்து அச்சுவேலி பத்தமேனியில் வசித்து வந்தார்.

சனிக்கிழமை காலை ஷெல், ஹெலி தாக்குதல்களால் அதிர்ச்சி அடைந்து மரணமானார்.

தெய்வீக மாநாடு நல்லையில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 6

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஞாயிறு காலை விசேட அபிஷேக ஆராதனைகளுடன் திருநெறிய தெய்வீக மாநாடு ஆரம்பமானது.

பதினாறு ஆண்டுகளாக இம்மாநாடு தொடர்ந்து நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

ஞானசம்பந்தப் பெருமான், மங்கல வாத்தியம் முழங்க திருவீதி உலாவாக நல்லூர்க்கந்தன் கோவிலுக்கு எழுந்தருளி விடையேறும் பெருமான் சந்நிதியில் திருமுலைப்பால் பெற்ற காட்சி இடம்பெற்றது.

பின்னர் அடியவர்களுக்கு ஞானப்பால் பிரசாதம் வழங்கப்பட்டது. அதன் பின்னர் ஞானசம்பந்தப்பெருமான் ஆதீன பூஜை மண்டபத்தில் தமது ஆசனத்துக்கு எழுந்தருளினார். இதன் பின்னர் ஆதீனகலாமண்டபத்தில் தமிழ்மணி அ-கணேசசுந்தரம் பண்ணிசை நிகழ்த்தினார். (உ-ச)

நுங்கு வெட்டச்சென்ற வாலிபன் எங்கே?

மண்டைதீவு, மே 6

நுங்கு வெட்டச்சென்ற வாலிபர் ஒருவர் மர்மமான முறையில் காணமற் போய்விட்டார்.

மண்டைதீவு கிழக்குப் பகுதியைச் சேர்ந்த திரு ந-ராசா என்பவரே காணாமற் போனவர் ஆவார்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை கடற்படைக்கு சொந்தமான வீரசூரிய படகிலிருந்து மண்டைதீவு மினி இராணுவ முகாமுக்கு பொருட்கள் இறக்கும் வேலைகள் நடைபெற்றன.

அன்றைய தினம் கடற்கரைப் பகுதியில் சென்றிக்கு நின்றிருந்த இராணுவத்தினர் இவரைக் கடத்திச்சென்று இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

தனது மகனைக் கண்டு பிடித்துத் தருமாறு யாழ் அரச அதிபரை நேற்று செவ்வாய்க்கிழமை பெற்றோர் சந்தித்து வேண்டுகோள் விடுத்தனர்

முன்பு மீன் தூள் ஆலையில் கடமையில் ஈடுபட்டிருந்த காவலாளிகள் இருவர் இவ்வாறு மர்மமான முறையில் காணாமற் போனது குறிப்பிடத்தக்கது. (இ-88)

சிப்பாய்களின்

கேளிக்கை இடங்களாக கோயில்கள்?

கட்டுவன், குரும்பசிட்டி பகுதிகளில் அவல நிலை

பலாலி, மே.6

பலாலி முகாம் விஸ்தரிப்புக்குள்ளான இந்துக் கோவில்கள் இரவு நேரங்களில் இராணுவத்தினரின் கேளிக்கை இடங்களாக மாறி வருகின்றன என்று கூறப்படுகிறது.

கட்டுவன், குரும்பசிட்டிப் பகுதிகளில் இராணுவம் நிலை கொண்டுள்ள ஆலயங்களுக்கே இக்கதி ஏற்பட்டுள்ளது.

கட்டுவன் மாவடி வைரவர் கோவில், வீரபத்திரர் கோவில், குரும்பசிட்டி அம்மன் கோவில் என்பனவற்றில் இராணுவத்தினர் உள்ளனர்

இரவு நேரங்களில் இக் கோவில்களில் இருந்து இராணுவத்தினர் ஆடிப் பாடும் சத்தங்கள் கேட்கின்றனவாம்.

அவர்களது ஆடல் பாடல்களுக்கு தாளமாக கோவில் மணிகள் பாவிக்கப்படும் சத்தங்களும் கேட்கின்றன.

இது குறித்து இப்பகுதி இந்துக்கள் பெரும் கவலை கொண்டுள்ளனர். (இ-ஏ-119)

விளையாட்டரங்கு

அலி இல்லம் முதலிடம்

யாழ்ப்பாணம். மே 6

யாழ். ஒஸ்மானியா கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டியில் 178 புள்ளிகளைப் பெற்ற அலி இல்லம் முதலாமிடத்தை தட்டிக் கொண்டது

175 புள்ளிகளைப்பெற்ற இக்பால் இல்லம் இரண்டாமிடத்தையும் ஷாபி இல்லம் 144 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தையும் பெற்றன.

வீர முதல்வர்களாக தெரிவு செய்யப்பட்டவர்கள் வருமாறு:-

13 வயதுப் பிரிவு: எம். எம். ஜனூஸன்.
15 வயதுப் பிரிவு: எச். எம். நியாஸ்.
17 வயதுப்பிரிவு: எம். ஏ ஹாரிஸ்.
19 வயதுப்பிரிவு: எம். ஏ எச். ஏ. முஹைமின்.

(ஈ-7)

இன விடுதலைப் பங்களிப்புக்கு கவிதைகள் தூண்ட வேண்டும்

கவிதை அறிமுக விழாவில் உரை

மண்டைதீவு, மே 6

அன்னியரின் ஆதிக்கத்துக்கு எதிராக போர்க்கொடி தூக்கிய இந்திய மக்களை பாரதியின் கவிதைகள் எவ்வாறு விழிப்படையச் செய்தனவோ அவ்வாறே தம் நாட்டுக் கவிஞர்களின் படைப்புக்களும் மக்களை இனவிடுதலைக்குப் பங்களிக்கத் தூண்டவேண்டும்.

மண்டைதீவில் நடைபெற்ற அல்லையூர் ஆறுமுகத்தின் அடைப்புக்குறிக்குள் கவிதை நூல் அறிமுக விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய யாழ். பல்கலைக் கழக புவியியல் விரிவுரையாளர் திரு. சிவச்சந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

தீவுப்பகுதி எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு திக்கைச்சிவன் தலைமையில் மண்டைதீவு மகா வித்தியாலய மண்டபத்தில் வைபவம் நடைபெற்றது

திரு. சிவச்சந்திரன் தொடர்ந்து பேசுகையில் கடந்த கால் நூற்றாண்டு காலங்களுக்கு மேலாக பல புனைபெயர்களில் மறைந்து நின்று எழுதி வரும் இக்கவிஞரின் இனப்பற்றையும் மொழிப் பற்றையும் கண்டு பலதடவை வியந்துள்ளேன்.

சமகால பிரச்சினைகளை மையமாகக் கொண்டு பல கவிதைகளை அழகான தமிழில் இலகுவான வசன நடையில் படைத்துள்ளார்.

குடத்துள் விளக்காக இருக்கும் இக்கவிஞரை சகல தமிழ் மக்களும் அறியும் வகையில் இவரது கவிதைகளை தொகுத்து வெளியிட இவரது நண்பர்களுக்கும் தீவுப்பகுதி எழுத்தாளர் சங்கத்துக்கும் எனது பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்கள். (இ-88)

இரத்ததானம்

யாழ்ப்பாணம், மே 6

யாழ் நல்லூர் ஜனசக்தி சனசமூக நிலையத்தினர் யாழ் வைத்தியசாலை இரத்த வங்கிக்கு இரத்ததானம் வழங்கினர்.

ஆண், பெண், இளைஞர்கள் என 30 பேர் வரை இரத்ததானம் செய்தனர் என்று இரத்த வங்கி வைத்திய அதிகாரி டாக்டர் கதாசரன் தெரிவித்தார். (இ-ள)

கஷ்டங்கள் வந்தாலும் கலை, கலாசாரங்களை வளர்க்கப் பின்னிற்கக் கூடாது

வட்டுக்கோட்டை, மே 6

எமக்கு என்னதான் கஷ்டங்கள் ஏற்பட்ட போதிலும் நாம் எமது கலை, கலாசாரங்களை வளர்ப்பதில் பின் நிற்கக் கூடாது. எமது பாரம் பரிய கலை, கலாசாரங்களை அழியவிடாது பாதுகாத்து அவற்றை வளர்ப்பது எமது ஒவ்வொருவரதும் கடமை.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி வள்ளியம்மை மண்டபத்தில் நடைபெற்ற ஜப்பனீஸ் இசைக் குழுவின் அறிமுக விழாவில் உரையாற்றிய சங்கானை கிழக்குப் பிரிவு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு ஜி. சிதம்பரநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அதிபரும் வடமாகாண அதிபர்கள் சங்கத் தலைவருமான திரு. க. அருணாசலம் தலைமையில் விழா நடைபெற்றது.

திரு ஜி சிதம்பரநாதன் தொடர்ந்து உரையாற்றும்போது இன்றைய அறிமுக விழாவில் இடம்பெற்ற 'தேன் மாலைப் பொழுது' நிகழ்ச்சியானது ரசிகர்களை நன்றாக ஈர்த்திருக்கின்றது இன்றைய கால கட்டத்திற்கு ஏற்றவாறு பாடல்களை அமைத்திருப்பதும் அவற்றைப் புதிய உத்திகளுடன் பாடியிருப்பதும் உள்ளுணர்வை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது என்றார்.

வைத்திய கலாநிதி சுசந்தன் இன்னாசித்தம்பி உட்பட மற்றும்பலரும் விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர். (இ-161)

மக்கள் முகம்

ஆனந்தபுரம் கலைவாணி சனசமூக நிலையம்

யாழ்ப்பாணம், மே 6

கல்வியங்காடு புதிய செம்மணி றோட், ஆனந்தபுரம் கலைவாணி சனசமூக நிலையத்தின் நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- திரு. சி சுந்தரலிங்கம், உப தலைவர்- திரு. சி சற்குணம், செயலாளர்- திரு வ. மார்க்கண்டு, உப செயலாளர்- திரு. இ. இரவிச்சந்திரன் பொருளாளர்- திரு. க. புஷ்பராஜா, போஷகர்- திரு. க. சுந்தரையா.

7 பேர் கொண்ட நிர்வாக சபையினரும் தெரிவு செய்யப்பட்டனர். (இ)

பாடசாலைகளில் அதிபர் தலைமையில் சோதனை

கொழும்பில முன்னேற்பாடு

கொழும்பு, மே 6

பாடசாலைகள் ஆரம்பமாவதற்கு ஒரு மணித்தியாலத்துக்கு முன்னர் அதிபர் தலைமையிலான பாதுகாப்புக்குழு வகுப்பறைகளைச் சோதனையிடும்.

அதற்குப் பின்னர் தான் மாணவர்கள் வகுப்பறைக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

இந்த நடைமுறை கொழும்புப் பாடசாலைகளில் நேற்று செவ்வாய் முதல் அமுலுக்கு வந்தது.

பாடசாலை சேவை நடத்தும் பஸ்களுக்கும் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. (உ-எ)

பஸ் நிலையங்கள் இடம்மாற்றம்

கொழும்பு, மே 6

கண்டியில் உள்ள இரண்டு பஸ் நிலையங்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக போகம்பரைக்கு இடம்மாற்றப் படவுள்ளன. (இ-ஏ)

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

பணப்பயிர்களை விடுத்து உப தானியங்களைப் பயிரிடுக

விவசாய அலுவலர் கூறுகின்றார்

பண்டத்தரிப்பு, மே 6

விவசாயிகள் பணப் பயிர்களைச் செய்து சந்தைப்படுத்த முடியாது அவஸ்தைப்படுகிறார்கள். பணப்பயிர்களுக்கு பதிலாக உப தானியங்களை செய்தால் எல்லோருக்கும் பயன் கிடைக்கும்.

பண்டத்தரிப்பு விவசாய விரிவாக்க அலுவலர் திரு. வை பாலகிருஷ்ணன் மேற்கண்டவாறு கூறினார்.

தொட்டிலடி விவசாய மன்ற வளவில் நடைபெற்ற விவசாயக் கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்:-

எரிபொருள் தட்டுப்பாடு, வெளிமாவட்ட சந்தைகளுக்கு அனுப்புவதில் சிரமம் இருக்கின்ற இன்றைய நெருக்கடிகளில் குரக்கன், சாமை, தினை, உழுந்து, பயறு, கௌபீ போன்றவற்றை கூடுதலாகப் பயிர் செய்ய வேண்டும்.

உப உணவுத்தானியங்களில் பருப்பு வகைகளை பயிரிடுவதால், உணவில் தன்னிறைவு கிடைக்கும்.

எரிபொருள் கிடைக்காதிருப்பதுபோல இறக்குமதி உணவுப்பண்டங்கள் கிடைக்காத நிலை வந்தாலும், பட்டினிச் சாவைத் தவிர்க்கலாம்.

பனம் பண்டங்கள் ஒடியல் பிட்டு, கூழ் என்பன நோய்களைத் தடுக்கக் கூடியவை மலேரியா நோயாளர் ஒடியல் கூழ், பிட்டுச் சாப்பிட்டு நோயைக் குணப்படுத்தலாம்.

சக்கரின் போட்டு குளிர்பானம்பாவிப்பதை தவிர்த்து பால் மாடு வளர்த்து, பால் தயிர் பருகுங்கள்!

இவற்றை நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு பெண்கள் கையில் தங்கியுள்ளது.

இப்படி அவர் கூறினார். (இ-ஏ-120)

கட்டுவன், குரும்பசிட்டி பகுதிகளில் வீடு உடைப்பு

பலாலி, மே 6

அண்மையில் புதிதாக முகாம்கள் அமைக்கப்பட்ட கட்டுவன், குரும்பசிட்டிப் பகுதிகளில் இருபதுக்கும் அதிகமான வீடுகள் உடைக்கப்பட்டுள்ளன. உடைக்காமலிருக்கும் வீடுகளில் இராணுவத்தினர் குடிகொண்டுள்ளனர்.

பாடசாலைக்குள் இராணுவம் முகாம் அமைத்திருந்த போதிலும் பாடசாலைக் கட்டடத்துள் இராணுவத்தினர் இருப்பதில்லை.

அருகில் உள்ள அதிபரின் வீட்டில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர்.

அவ்வீட்டின் முன்னுள்ள பிளாட்டின் மேல் மண்மூடைப் பாதுகாப்புடன் மோட்டோர்ஷெல் ஏவுதளம் அமைக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் கவச வாகனங்களும் படை வாகனங்களும் கட்டுவன் சந்தியிலுள்ள பிளாட் போட்ட கடைக்குள் பாதுகாப்பாக விடப்பட்டுள்ளன.

தபால் அதிபர் தம்பிப்பிள்ளையின் வீடு புதிய முகாமின் பொறுப்பதிகாரியின் விடுதியாக மாற்றப்பட்டுள்ளது. இங்கு இராணுவத்தினருக்கு புதிய குளியலறையும் கட்டப்பட்டு இராணுவ காவலுடன் பாவிக்கப் படுகின்றது

திரு. நாகராசா என்பவரது வீடு இரண்டாவது லெப்டினன்ட் ஒருவரினது விடுதியாகப் பயன்படுத்தப்படுவதுடன் வீட்டின் மேல் மரங்கள் அமைத்து காவல் தளமாகப் பயன்படுத்தப்படுகின்றது.

இடிக்காத நிலையில் பயன் படுத்தப்படுகின்ற வீடுகளில் இராணுவ மினி முகாமில் உள்ள சிப்பாய்கள் தாமே சமைத்து உண்டுகொண்டிருக்கின்றனர்.

குரும்பசிட்டியில், குப்பிளானுக்குச் செல்லும் சந்தியில் உள்ள மேல்மாடி வீடும், வன்னியசிங்கம் என்பவரின் வீடும், 'ஈப்றோ' பல் தொழிலகத்திலும் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர்.

போராளிகளால் ஏற்கனவே இப்பகுதிகளில் உடைக்கப்பட்ட மதில்களைத் தவிர ஏழு வீடுகள் முற்றாக உடைக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

போராளிகளால் தோண்டப்பட்ட அகழிகளும் மண்மூடை அரண்களும் இராணுவ பாவிப்பிலுள்ளன (இ-ஏ-119)

பாடசாலைகள் சீர்பெற அதிபர்கள் விழிப்பாகச் செயற்பட வேண்டும்

புங்குடுதீவு, மே 6

பாடசாலைகளின் நிர்வாகம் சீர்பெறவேண்டுமாயின் அதிபர்கள் மிக்க விழிப்புடன் செயற்பட வேண்டும் பெற்றோர், ஆசிரியர், மாணவர் ஒத்துழைப்பைப் பெற முயல வேண்டும். பாடசாலை அதிபர்கள் இன்று முதல் நிலை முகாமையாளர்களாக விளங்குகிறார்கள். அவர்களது பொறுப்பு மேலும் அதிகரித்துள்ளது.

இவ்வாறு யாழ் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் கூறினார்.

வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயத்தில் தீவுப்பகுதி ஆரம்ப பாடசாலை அதிபர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சி வகுப்பொன்று நடைபெற்றது.

இவ் வகுப்பை ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே ஜனாப் மன்சூர் மேற்கண்டவாறு கூறினார்

புங்குடுதீவு வட்டாரக் கல்வி அதிகாரி திரு. க. இ. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற இப் பயிற்சி வகுப்பில் கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன், கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் திரு. ஏ. பஞ்சலிங்கம் பிரதம கல்வி அதிகாரி திரு. க. கந்தசாமி ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினர். (உ-ஏ-181)

அறிவைப் பெறுவது மட்டுமன்றி அதன் வழி செயலாற்ற வேண்டும்

ஒஸ்மானியாக் கல்லூரி பரிசளிப்பு வைபவத்தில் உரை

யாழ்ப்பாணம், மே 6

அறிவைப் பெறுவதில் மட்டும் பெருமை கிடைப்பதில்லை. அதன்வழி நின்று பணி செய்வதில்தான் எல்லா வெற்றியும் தங்கியுள்ளது.

யாழ் கல்வித் திணைக்கள பிரதம கல்வியதிகாரி திரு.கே. கந்தசாமி இவ்வாறு கூறினார்.

யாழ் ஒஸ்மானியாக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளில் பரிசில் வழங்கும் வைபவம் கல்லூரியின் மஹ்மூத் மண்டபத்தில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் ஜனாப் எ.எச். ஹாசீம் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில், பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களை வழங்கி உரையாற்றுகையிலேயே கல்வி அதிகாரி இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்-

மாணவர்கள் படிப்பது பரீட்சைக்கு தோற்றுவதும், நல்ல பெறுபேறுகளை அடைவதும் தற்பெருமையடைவதற்குத்தான் என்று எண்ணுகிறார்கள்.

கல்வி கற்க வேண்டிய வயதில் அதன் பெருமையை உணராமல் கல்லூரிக்கு வெளியே எத்தனையோ பிள்ளைகள் அலைகிறார்கள்.

படிக்கும் மாணவன் படிக்காது திரியும் ஒரு பிள்ளைக்கு கல்லூரிக்கு வருவதற்கு உணர்வூட்டுவானானால் அவனே பெருமை நிறைந்தவன். இவ்வாறு கந்தசாமி கூறினார். (-ஏ)

இரவு நேரங்களிலே வீதி விளக்குகளை அணைக்க யோசனை

யாழ்ப்பாணம், மே 6

இரவு நேரங்களில் வீதி விளக்குகளை அணைக்க வேண்டும். இதனால் இரவு நேர விமானத் தாக்குதல்களிலிருந்து பெருமளவு தப்பித்துக்கொள்ளலாம்.

இவ்வாறு மல்லாகம் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. எஸ். ஸ்ரீவாஸ்கரன் யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை மல்லாகம் உப அலுவலக அதிகாரிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இக்கடிதத்தின் பிரதி யாழ்ப்பாணம் [illegible] ளாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற இரவுநேர விமானக் குண்டு வீச்சுச் சம்பவங்கள் போன்று யாழ்ப்பாணத்திலும் இரவுக் குண்டு வீச்சுக்கள் இடம்பெறலாம்.

இரவில் வீதி விளக்குகள் எரிவது குண்டு வீச்சு விமானங்களுக்கு அனுகூலமானவை.

எனவே தற்போதைய பிரச்சினைகள் தீரும்வரை இரவு நேரங்களில் வீதி விளக்குகளை அணைத்து [illegible] பொதுமக்கள் புரிந்து இதனால் ஏற்படும் சிரமங்களை சகித்துக்கொள்வார்கள்.

இவ்வாறு அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-ஏ)

குண்டு வெடிப்புக்கு கண்டனம்

கொழும்பு, மே 6

கொழும்பு புறக்கோட்டை பஸ் குண்டு வெடிப்புச் சம்பவத்தைக் கண்டித்து இலங்கை வர்த்தக கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் செயற்குழு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

செயற்குழுக் கூட்டம் சென்ற 24 ஆம் திகதி சங்க மண்டபத்தில் நடந்தது. (இ-ஏ)

கிராமிய வங்கி நிரந்தரமாக செயற்படும்

மானிப்பாய், மே 6

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஆதரவுடன் சுன்னாகத்தில் தற்காலிகமாக செயற்பட்டு வந்த கூட்டுறவுக் கிராமிய வங்கி, நிரந்தரமாக செயற்படுவதற்கான அனுமதியை கொழும்புத் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ் வங்கி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் திறக்கப்பட்ட நான்காவது வங்கி ஆகும். (இ-90)

உதய சங்கற்பம்

கடவுள் அவனவனுக்கே உரியபொருள். அத்தொடர்பே நிலையானது. இறைவனிடத்து அவனவன் கொள்ளும் அன்பின் முதிர்ச்சிக்கு ஏற்றவாறு, ஒருவன் அவனை உணர்கிறான்

— அன்னை சாரதாதேவி

உதயன்

[illegible]

இல. 15, [illegible] தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 23078
யாழ்ப்பாணம் 06-05-1987 த.பெ.இல. 88

பாவ மன்னிப்புக்கேனும பெயரை மாற்றுங்கள்

வெட்கம்! வெட்கத்திலும் வெட்கம்!!

ஸ்ரீலங்காவை ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி அக்கிரம அரசாங்கத்தில் இன்னும் ஒட்டிக் கொண்டிருக்கும் தமிழர்களாகப் பிறந்த அமைச்சர்களுக்குப் பெரும் வெட்கம்!

ஈழம் வாழ் தமிழர்கள் பல தடவைகள் வற்புறுத்தியும், அவர்களின் குரல்களாக விளங்கும் பத்திரிகைகள் புத்திமதி கூறியும் கூட, அக்கிரம ஆட்சியுடன் இன்னும் மூன்று நான்கு தமிழர்கள் ரோசமில்லாதவர்களாக ஒட்டிக் கொண்டிருக்கின்றனர்!

இப்போது, தூரத்தே தமிழகத்தில் இருந்து ஸ்ரீலங்கா அரசில் அட்டைபோல ஒட்டிக் கொண்டிருக்கும் தமிழ் அமைச்சர்கள் விலக வேண்டும் என்ற கோரிக்கை வந்திருக்கிறது. தமிழக சட்டசபையின் தி. மு. க. குழுத்தலைவர் திரு. நாஞ்சில் மனோகரன், ஸ்ரீலங்கா அரசில் அங்கம் வகிக்கும் தமிழ் அமைச்சர்கள் உடனே ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கிறார். வெளியிலிருந்து இப்படி ஒரு கோரிக்கை வரும்வரை தமது பதவியில் ஒட்டிக் கொண்டிருப்பவர்கள் ஒட்டைச் சிரட்டைக்குள் மூக்கை வைத்துத் தற்கொலை செய்ய வேண்டாமா? அவர்களால் ஈழத் தமிழர்கள் யாவருக்கும் அல்லவா அவமானம்?

தமிழர்களைத் திட்டமிட்டு அழித்து வருகிறது ஸ்ரீ லங்கா அரசு. கட்டம் கட்டமாக தனது திட்டத்தை முடுக்கி விட்டு, மூர்க்கத்தனத்தை அதிகரித்து வருகிறது. தமிழ்ப் பிரதேசங்களையும், அப்பாவி மக்களையும் குண்டு வீசி அழிக்கும் அளவுக்கு அதன் அரக்கத்தனம் கட்டுமீறியுள்ளது

பேச்சுவார்த்தை என்று வேடம் போட்டு, அமெரிக்கா, இஸ்ரேல், பாகிஸ்தான் ஆகிய பல சாத்தான்களை உதவிக்கு அழைத்து, தனது இராணுவ பலத்தை அது ஸ்திரப்படுத்தி உள்ளது. அந்தத் துணிவில் ''இவர்கள் எமது அலுவல்களில் தலையிடுவதோ?'' என்ற தோரணையில் இந்தியாவைக் கூட அடிக்கடி ஏற இறங்கப் பார்த்து வருகிறது

அரசாங்கத்தின் ஷெல்லடிக்கும், குண்டு வீச்சுக்கும் இரையாகும் தமிழர்களில் 99 சதவீதமானோரும் அப்பாவிகள் என்பது அரசில் ஒட்டியிருக்கும் தமிழர்களுக்குத் தெரியாமல் இருக்க நியாயமில்லை. ஆனால் அதனை அரசாங்கத்திடம் துணிந்து கூறி, அப்பாவித் தமிழர்கள் சாகடிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த அவர்களுக்கு ஏது திராணியும், வலிமையும்?

புறக்கோட்டைக் குண்டுவெடிப்பில் 110 பேர் மாண்டதும் வடக்கில் குண்டுவீசித் தமிழ் மக்களை அழிக்கும் அளவுக்கு சிங்கள அமைச்சர்கள் சக்திபடைத்தவர்களாக இருக்கிறார்கள்

ஆனால் லட்சக் கணக்கான தமிழ் மக்களுக்கு உயிர்காப்புச் சேவை செய்யும் யாழ் ஆஸ்பத்திரியை மூடுவதைத் தடுத்து நிறுத்தக் கூடிய சக்தி அல்லது செல்வாக்குத் தானும் அரசில் ஒட்டிக்கொண்டிருக்கும் அந்த மூன்று நான்கு தமிழர்களுக்கும் இல்லை!

தமிழர்களை அழிப்பது தொடக்கம் அவர்கள்மீது பொருளாதார, மற்றும் வைத்திய சேவைத் தடை விதிப்பது வரை ஆளும் அரசு செய்யும் சகல அட்டூழியங்களுக்கும் இந்த மூன்று நான்கு பேரும் விருப்பத்துடனோ விருப்பம் இல்லாமலோ உடந்தையாகிவிடுகிறார்கள்.

தமது சொந்த மக்களை அழிப்பதில் தமக்கும் பங்குண்டு என்பதை உணர்ந்தாவது, தமது மனச்சாட்சியைத் தொட்டுப்பார்த்தாவது இவர்கள் தமது பதவிகளை ராஜினாமாச் செய்திருக்கவேண்டும். அற்ப சொற்ப சலுகைகளுக்கு அடிமைப்பட்டவர்கள், மானம், ரோசம், மரியாதை, மனச்சாட்சி ஆகியவற்றைச் சுழற்றி வைத்து விட்டுத்தான், தாம் பிடித்த இடங்களை அழுங்காகப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள் போலும்!

ஒருவனது உறவினருக்கு அல்லது இனத்துக்கு ஆபத்து வந்தபோது, தானாடாவிட்டாலும் தன் தசை ஆடும் என்பார்கள். சம்பந்தப்பட்டவர்களுக்கு அந்தளவுக்கு இரத்தோட்டம் இல்லைப் போலும்! தமிழகத்தில் வாழும் தமிழர்களுக்கு இருக்கும் இன உணர்வில் ஒரு துளியாவது இவர்களிடம் காணப்படவில்லையே!

பதவிக்கும், பணத்துக்கும் இவர்கள் விலைபோக, அதனைப் பயன்படுத்தி தமது அரசில் தமிழர்களும் அங்கம் வகிக்கிறார்கள், தமிழர்களுக்குக் கெடுதி செய்தால் அவர்கள் பார்த்துக் கொண்டிருப்பார்களா என்று அரசு வெளி உலகத்துக்கு வேடம் போட்டுக் காட்டுகிறது

ஆகவே அரசில் ஒட்டிக்கொண்டிருக்கும் தமிழர்கள், பச்சைத் தமிழர்களாக, தன்மானம் உள்ள தமிழர்களாக இருப்பின் வெளியிலிருந்து ராஜினாமாக் கோரிக்கை வந்த இவ்வேளையிலாவது உடனடியாகத் தமது பதவிகளை ராஜினாமாச் செய்யவேண்டும். இல்லையேல் தயவு செய்து அவர்கள் தமது பெயர்களையாவது அப்புஹாமி, பொடிசிஞ்ஞோ, உக்கு பண்டா, அலிஸ் நோனா என்று மாற்றிக் கொள்ளட்டும்! அப்போதாவது! ஓரளவு பாவ மன்னிப்புக் கிடைக்கலாம்!!

ஷெயில் சிங் 71ஆவது பிறந்த தினம்

புதுடில்லி, மே 5

ஜனாதிபதி ஷெயில் சிங் தனது எழுபத்தோராவது பிறந்த தினத்தை நேற்றுக் கொண்டாடினார்.

முப்படைகளின் தளபதிகள் ஜனாதிபதியைச் சந்தித்துத் தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர். (இ-எ)

பஞ்சாப்பில் 4 பேர் பலி!

சண்டிகார், மே 5

பஞ்சாப் மாநிலத்தில் கடந்த திங்கள் 4 பேர் உயிரிழந்தனர்

இவர்களில் மூவர் தீவிரவாதிகள். ஒருவர் பொலிஸ் அதிகாரி.

அமிர்தசரஸில் இச் சம்பவம் நடைபெற்றது. (இ-எ)

ஹரியானா தேர்தல் ஜூன் 17 இல்

மேனகா காந்தியும் தேர்தல் களத்தில்

புதுடில்லி, மே 5

ஹரியானா மாநிலசட்ட சபைத் தேர்தல் எதிர்வரும் மாதம் 17 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநில தேர்தல் அதிகாரிகளுடன் நடத்திய மாநாட்டைத் தொடர்ந்து, தேர்தல் திகதி நிர்ணயிக்கப்பட்டது.

இந்திய பிரதம தேர்தல் ஆணையாளர் திகதியை கடந்த திங்கள் புதுடில்லியில் வெளியிட்டார்.

வேட்பு மனுக்கள் இம்மாதம் 18 முதல் 25 வரை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

ஹரியானா மாநில அரசு தற்போது இந்திரா காங்கிரஸ் வசம் உள்ளது

புதிய தேர்தல் இந்திரா காங்கிரஸுக்கு பலப்பரீட்சையாக அமையலாம் என்று கருதப்படுகிறது.

இதனிடையில் திருமதி மேனகா காந்தியின் சஞ்சய் விஹார் மஞ்ச்கட்சி, ஹரியானா மாநில சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் தேவிலாலின் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது.

இதன் கீழ் தற்போது முதலமைச்சராக உள்ள பஜன்லாலை எதிர்த்து, திருமதி மேனகா காந்தி போட்டியிடுவார். (இ-எ)

பிரிட்டிஷார் தடை செய்த

லெனினின் வாழ்க்கை பற்றிய அரிய நூல்

ரஷ்யர்கள் கண்டுபிடிப்பு

மாஸ்கோ, மே 4

இந்தியப் பிரசை ஒருவரால் எழுதப்பட்ட லெனினின் வாழ்க்கை பற்றிய அரிய புத்தகம் ஒன்றை ரஷ்ய பத்திரிகையாளர் கண்டுபிடித்திருக்கிறார்.

இப்புத்தகம் பிரிட்டிஷாரினால் தடைசெய்யப்பட்டிருந்தது

லெனினின் வாழ்க்கை பற்றிய உலகில் முதலில் வெளியிடப்பட்ட புத்தகங்களில் இதுவும் ஒன்று

எழுதிய இந்திய பத்திரிகையாளரின் பெயர் கிருஷ்ணாராவ்.

வெளியிடப்பட்ட பின்னரே பிரிட்டிஷ் அரசு இப்புத்தகத்தைத் தடை செய்தது.

இப்புத்தகம் தற்போது மாஸ்கோவிலுள்ள புரட்சி தொல்பொருள் காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (உ-எ)

இந்தியா ரொக்கட் பரிசோதனை

சென்னை, மே 5

இந்திய விஞ்ஞானிகள் கடந்த திங்கட்கிழமை ரொக்கட் ஒன்றை வெற்றிகரமாகப் பரீட்சித்துப் பார்த்தனர்.

சுமார் 300 கிலோ மீட்டர் தூரம் இந்த ரொக்கட் செலுத்தப்பட்டது.

ஸ்ரீஹரிகோட்டாவின் வெளி ஆராய்ச்சித் தளத்தில் இருந்து இது ஏவப்பட்டது. (இ-எ)

குண்டுவெடிப்பில் 7 பேர் மரணம்

இஸ்லாமாபாத், மே 5

குண்டுவெடிப்புச் சம்பவங்களில் பாகிஸ்தானில் 7 பேர் உயிரிழந்தனர். என்று அறிவிக்கப்படுகிறது

பள்ளிவாசல் அருகில் குண்டு ஒன்று வெடித்ததில் 7 பேர் உயிரிழந்தனர். 4 பேர் காயமடைந்தனர்.

இன்னொரு குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 9 பேர் காயமடைந்தனர்.

மூன்றாவது குண்டு வெடிப்புச் சம்பவத்தில் எவரும் காயம் அடையவில்லை. (இ-எ)

இந்திய அமைச்சர் இராஜினாமா

புதுடில்லி, மே 5

இந்திய மத்திய அரசின் அமைச்சராக பணியாற்றிவந்த திரு. கனிஹான் சௌத்ரி தனது பதவியை ராஜினாமாச் செய்துவிட்டார்.

இவர் திட்ட அமுலாக்கல் அமைச்சராகப் பணியாற்றினார்.

நாடாளுமன்றத்தின் பொதுக் கணக்குக் கமிட்டி திரு. சௌத்ரி தனது தொகுதியில் காணிப் பகிர்வு விஷயத்தில் முறைகேடாக நடந்துகொண்டார் என்று கூறியிருந்தது. அதைத் தொடர்ந்தே அமைச்சர் திரு. சௌத்ரி ராஜினாமாச் செய்தார். (உ-எ)

50 சத வீத குறைப்புக்கு அமெ. ஆதரவு

ஜெனிவா, மே 5

நீண்ட தூர ஏவுகணைகளில் 50 சத வீத வெட்டைக் கொண்டுவர அமெரிக்க அரசு விருப்பம் தெரிவித்துள்ளது.

ஜெனிவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆயுதக் குறைப்பு மாநாட்டில் இது சம்பந்தமான நகல் திட்டம் ஒன்றை அமெரிக்க அரசு அதிகாரிகள் சமர்ப்பித்தனர்.

இம்மாநாட்டில் ரஷ்ய அமெரிக்க அதிகாரிகள், கலந்துகொண்டு பேச்சுக்களை நடத்தி வருகின்றனர். (இ-எ)

வெளி உலகில்

தமிழ்ப் போராளிகளுக்கு

ரஷ்யா உதவுவதாக அமெ. சஞ்சிகை தகவல்

மாஸ்கோ, மே 5

தமிழ்த் தீவிரவாதிகளுக்கு சோவியத் யூனியன் உதவுவதாக இலங்கை அரசுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்ததாக அமெரிக்காவின் 'வால் ஸ்ரீட் ஜர்னல்' சஞ்சிகை வெளியிட்ட கருத்து மாஸ்கோவில் பலத்த கண்டனத்துக்குள்ளாகி இருக்கிறது.

இது தொடர்பாக மாஸ்கோவில் உள்ள இலங்கைத் தூதர் நெவில் கனகரத்தினம் சோவியத் வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டார் என்று தகவல்கள் வந்துள்ளன

இக் குற்றச்சாட்டைக் கண்டித்து ரஷ்ய வெளிவிவகார அமைச்சு அறிக்கை வெளியிட்டது தெரிந்ததே. (இ-எ)

ஜெர்மன் - பிரெஞ்சு தலைவர்கள் பேச்சு

பொன், மே 5

மேற்கு ஜெர்மன் அதிபர் ஹெல்மட் கோல், பிரெஞ்சுப்பிரதமர் சிராக்குடன் பேச்சுக்கள் நடத்தினார்.

ஐரோப்பிய நாடுகளில் இருந்து நடுத்தர, குறுகிய தூர ஏவுகணைகளை அகற்றுவது சம்பந்தமாக இப் பேச்சுக்கள் இடம்பெற்றன என்று அறிவிக்கப்படுகிறது. (இ-எ)

இலங்கை இனப்பிரச்சினை:

ராஜீவின் கொள்கைக்கு 'இந்து' கடும் சாட்டை!

இலங்கையின் துக்ககர நிலைமை; இந்தியா செய்ய வேண்டியது என்ன?

இக் கட்டுரை 25-4-1987 'இந்து' இதழில் வெளியான ஆசிரிய தலையங்கத்தின் இரண்டாம் பகுதி இங்கு பிரசுரமாகிறது.

கடந்த இரு தினங்களாக அரச பயங்கரவாதத்திற்குப் பலியெடுக்கப்பட்ட பொதுமக்கள் தொகை பயமூட்டுவதாக உள்ளது.

பெண்கள் பிள்ளைகள் உட்பட பல அப்பாவி மக்களைப் பலியெடுத்ததும் மிக சக்தி வாய்ந்ததும்- தொழில் நுட்பத் திறமை வாய்ந்ததுமான குண்டு வெடிப்பு ஒன்று கொழும்பு நகர மத்தியில் செவ்வாய்கிழமை இடம் பெற்றது.

இதன் பின்பே அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது என்பது கவனிக்கப்பட வேண்டியதொன்று.

இதற்கு முன்னதாக பெருந்தொகையான-- படையினரை உள்ளடக்கிய-- சிங்களப் பயணிகள் வழியில் இடைமறிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்கள்.

'பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம்' என்ற பெயரில் அரசாங்க பாதுகாப்புப் படையினர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சாதாரண பொதுமக்களை குறிவைத்து நீண்ட நாட்களாகத் தாக்குதல் நடத்தி வந்தார்கள்.

இதைத் தொடர்ந்து இப்படுகொலைகள் இடம் பெற்றன.

இக் கொடூரங்களுக்கான பழியை தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதும் அதன் சகபாடியான ஈரோஸ் மீதும் சுமத்துவதில் அரசாங்கம் அவசரம் காட்டியது.

இந்த இயக்கங்களோ குறித்த சம்பவங்களிற்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லையென அதே வேகத்தில் மறுத்து விட்டன.

இச்சம்பவங்கள் இலங்கையின் பொது நிலைமை மேலும் மோசமாக்கியுள்ளன.

இதனிடையே இலங்கையின் நாடாளுமன்றத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம். பி. ஒருவர் கொழும்பு பஸ்தரிப்பு நிலையத்தில் நடைபெற்ற குண்டு வெடிப்பு இஸ்ரேலியர்கள் உதவியுடன் நடத்தப்பட்ட ஒரு 'உள் வீட்டு வேலை' என மக்களிடையே நிலவும் ஒரு ஐயுறவு பற்றி குறிப்பிட்டுள்ளது கவனத்தை ஈர்ப்பதாகவுள்ளது.

இச் செயல்களுக்கான பொறுப்பு எங்கிருந்த போதிலும் ஜனநாயக நிலைப்பாட்டிலிருந்து நோக்கும் போது 1983 முதல் ஒரு கொடிய வட்டம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது என்பது தெரிகிறது.

மிக அண்மித்த காலத்தில் வன்செயல்கள் அதிகரித்துள்ளன: இனவாதமும் தீவிரவாதமும் தமது பிடியை இறுக்கியுள்ளன. இரு மக்களும் சமூகமும் முழுமையான நெருக்கடிக்குள்ளாகியிருக்கிறார்கள்.

முற்றுகைவிடப்பட்டும், தாக்குதலுக்குள்ளாகியும் உள்ள தமிழ் மக்களிடையே தாம் அந்நியர் என்ற உணர்வு வளர்ந்துள்ள அதே யளவில் சிங்களவரிடையே தமிழ் விரோத உணர்வு [illegible] வளர்ந்துள்ளது. [illegible] ராக அவர்கள் கோபமும் வெறுப்பும் கொண்டுள்ளார்கள். இதனால் ஜெயவர்த்தன அரசு தனது எதிர்காலம் பற்றிய ஆழ்ந்த கவலை கொண்டிருக்கவே வேண்டும்.

கொடுமைகளுக்கு எதிராக கவனமாக திட்டமிடப்பட்ட சில எதிர் நடவடிக்கைகளை சமீப காலமாக கடைப்பிடிக்க முன் வந்துள்ள இந்திய அரசாங்கம் ஏன் ஸ்ரீலங்கா அரசின் செயல்களை உடனடியாகக் கண்டிக்கவில்லை?

இந்திய நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி எம். பிக்கள் இவ்விடயம் சம்பந்தமாக கவலை அடைந்திருப்பது சரியே.

ராஜீய வார்த்தைப் பிரயோகங்களுக்கும் தோற்றங்களுக்கும் அப்பால் சென்றே பகுத்தாராய வேண்டும்.

முன்னணிப் பிரச்சினைகளுள் ஒன்று கடுமையாக மோசமடையும் நிலையில் உள்ளது.

இந்தியாவின் உத்தியோக கொள்கை விசேட உற்சாகமின்மை, குழப்பம், முட்டாள்தனம் நிறைந்ததாய் இருக்கிறது— இடிபாடுகளுக்குள் முடங்கிக்கிடக்கிறது-- என்பதெல்லாம் இத்தகைய பகுத்தாராய்தல் செய்தால் தெளிவாகத் தெரியும்.

இந்தியாவின் இக் கொள்கைச் செயற்பாடு இலங்கையில் தோன்றி உள்ள அபாய நிலையை அளவிட முடியாது தோற்றுப்போய் இருக்கிறது.

பெப்ரவரி - மார்ச் மாதங்களில் இந்திய அரசின் தோற்றமும் விரைவு நடவடிக்கைப்பாணியும் [illegible] இந்திய அரசு முன் [illegible] விருப்ப

(4 ஆம் பக்கம் பார்க்க)

பொய்யாமொழி



குறள்:

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு

பொருள்:

சேர்ந்த நிலத்தின் இயல்பால் நீர் வேறுபட்டு அந்நிலத்தின் தன்மையுடையதாகும்; அதுபோல் மக்களுடைய அறிவு இனத்தின் இயல்பினை உடையதாகும்.

இருதயபுரத்தில் நால்வர் கொலை

மட்டக்களப்பு, மே 6

மட்டக்களப்பு மாநகர சுற்றுப் பகுதியில் ஊறணி முகாம் ஆயுத படையினர் மேற்கொண்ட அடாவடித் தனத்தில் இருதயபுர வாசிகள் நால்வர் சுட்டுக் கொல்லப்பட்டனர். (இ-81)

இரணைப்பாலை

பத்திமா மாதா திருநாள்

யாழ்ப்பாணம், மே 6

புதுக்குடியிருப்பு இரணைப்பாலை பத்திமா மாதா ஆலய வருடாந்த திருவிழாக் கொண்டாட்டங்கள் இன்று புதன் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றன

தொடர்ந்து 6 நட்களுக்கு நவநாட் திருப்பலிகள் நடைபெறும். 12 ஆம் திகதி தேவநற்கருணை ஆராதனையும், 13 ஆம் திகதி காலை திருநாட்பலிப்பூசையும் நடைபெறும் என பங்குத் தந்தை அருட்திரு நேசராசா அடிகள் தெரிவித்துள்ளார்

மாலை 7 மணிக்கு டங்கு இளைஞர்களின் 'எஸ்தாக்கியார்' நாட்டுக் கூத்து நிகழ்ச்சியும் இடம்பெறும். (இ-எ)

வாசகர் திருமுகம்

அகலவத்தை, மதவாச்சி எம்.பி.க்களே, சிந்தியுங்கள்!

அகலவத்தை எம். பி. திரு. மெரில் காரியவாசம், சமீபத்தில் நாடாளுமன்றத்தில் பேசுகையில் யாழ்ப்பாணம் இன்னொரு ஹிரோஷிமாவாகலாம் என்றும், அதனை ஒருவராலும் தடுக்கமுடியாது என்றும் எச்சரித்துள்ளார்

அரசின் போக்கை உற்றுநோக்கும்போது யாழ்ப்பாணம் மட்டும் அல்ல இலங்கை முழுவதுமே இன்னொரு ஹிரோஷிமாவாக மாறக்கூடிய அறிகுறிகள் இருப்பதை பாவம் அகலவத்தை எம். பி அறியார் போலும்.

மேலும் உலகின் இரு பெரும் வல்லரசுகளின் அணு ஆயுதப் பரீட்சார்த்த மைதானமாக இலங்கை மாறக்கூடுமென்பதையும் அறியாது, அகலவத்தை எம். பி. பிதற்றுகிறார்.

இவ்வாறு நிகழுமானால் தமிழ் இனம் மாத்திரமல்ல, சிங்கள இனமும் ஒன்று சேர்ந்து அழியக்கூடுமென்பதை எம். பி. அவர்களுக்குக் கூறி வைக்க விரும்புகிறேன்.

மேலும் மதவாச்சி எம். பி. திரு. மைத்திரிபால சேனநாயக்கா பெரும்பான்மை சமூகத்தினராகிய சிங்களவர், சிறுபான்மைத் தமிழருக்கு அடிமையாகிவிடுவர் என்ற ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளார்.

மைத்திரி அவர்களே! ஏன் இந்தக் கவலை! முன்னாள் (SUNDAY OBSERVER COLUMNIST) ஆன சேரப்பரையைப் பிறப்பிடமாகக் கொண்ட தமிழ் நங்கையை தங்களது மணவாட்டியாக்கியதன் பின்பும் ஏன் இந்தக் கவலை!

எவர் எவருக்குக் கட்டுப்பட்டிருக்கின்றனர் என்பதை இதுவரை புரியாதவராகத் திகைக்கின்றார் மைத்திரி அவர்கள். இவரின் கூற்று புதிராக அல்லவோ தோன்றுகிறது

யாழ்ப்பாணம் விக்டர் எஸ். திருபராஜ்

ரம்ழான் சிந்தனை

அவன் அவர்களுக்கு சுவர்க்கத்தின் வாயில்களைத் திறந்து விட்டவன் இரகசிய இச்சை என்னும் வாயில் வழியே அவர்களின் இதயங்களுக்குள் வைத்தான். [illegible] என்று அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தவன். அந்த இரகசிய இச்சையை அடக்குவதன் மூலமே ஆன்மா தன்னுடைய மேலான நிலையை உறுதிப்படுத்த முடியும் என்று அவர்களுக்கு அறிவுறுத்தியவன். அந்த அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும் உரியதாகும்

மௌலவி
ஏ. ஆர். எம். நவீர்

★ வர்ணப் புகைப்படப் பிரதி ஒன்று
ரூ. 5/- மட்டுமே!
★ ProcessingFree(நெகடிவ்செய்யஇலவசம்)
★ வர்ண புகைப்படச் சுருள்கள் விற்பனைக்கு
KODAK — FUJI — KONICA
SAKURA — FORTE — TUDOR
ஆர்த்தி ஜுவலிலர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23628

உதயன்

06 : 05: 1987 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது!
ஆர்த்தி ஜுவலிலர்ஸ்
★ தரமான வர்ண நிழற்படப் பிரதிகளை
★ கம்பியூட்டர் முறையில்
★ குறைந்த செலவில்
★ சிறந்த சேவையில்
பெற்றுக்கொள்ளலாம்

யாழ் நகரையே அழிக்க எடுத்த முடிவு

யாழ்ப்பாணம், மே. 6 வடமாகாண மக்களின் உயிர்நாடி நிலையமாக விளங்கும் யாழ்-வைத்தியசாலையை மூடுவதற்கு எடுத்த தீர்மானம் யாழ் நகரத்தையே அழித்தொழிப்பதற்கு எடுத்த முடிவாகும்.

இவ்வாறு மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத்தினால் விடுக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாதியர் பயிற்சியும் பல்கலைக்கழக மருத்துவக் கல்வியும் தடைப்பட்டுள்ளன.

தனது மனிதவேட்டையைத் துரிதப்படுத்துவதற்காகவே வைத்தியசாலையை மூடிவிடும்படி அரச உத்தரவிட்டுள்ளது. இந்த வழக்கை தமிழ் இனத்தை அழித்தொழிக்கும் இனப்படுகொலைக்கு இறுதி முடிவெடுத்துள்ளது என்பதை அரச நிரூபணமாக்கியுள்ளது.

இந்நிலையில் சர்வதேச மனித உரிமைகள் ஸ்தாபனம் உடனடியாகத் தலையிட்டு மனித உரிமைகளை நிலைநாட்ட வேண்டும்.

சகல பொதுஸ்தாபனங்களும் இணைந்து அரசின் மிலேச்சத்தனத்துக்கு எதிராக வெகுஜனப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

— இப்படி அந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது. (உ)

அடிப்படை உரிமையை மீறும் செயல் எனக் கண்டனம்

யாழ்ப்பாணம், மே 5 யாழ் அரசினர் ஆஸ்பத்திரியை மூடுவது தமிழரின் அடிப்படை உரிமையை மீறும் செயலாகும்.

இவ்வாறு யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தமிழினத்தை முற்றும் முழுதாகவே அழித்தொழிக்கும் இறுதி நடவடிக்கையாகும்.

பல்லாண்டுகளாக மக்களுக்கு சேவை செய்யும் ஒரு வைத்தியசாலையை சில ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்ட ஓர் இராணுவ முகாமிற்காக மூடுவது, யானையின் அளவுக்கு பாதத்தை வெட்டுவது போன்றதாகும்.

அரசின் இந்நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக தமிழ்ப் பிரதேசம் எங்கும் அலுவலகங்கள், ஆலைகள், கல்விக்கூடங்கள், பல்கலைக்கழகத்தின் போக்குவரத்துக்கள் அனைத்தும் ஸ்தம்பிக்கச் செய்ய வேண்டும்.

இதன்மூலம் தமிழனின் பரிதாப நிலையை சில தேசங்களிலும், ஐ. நா. சபையிலும் எதிரொலிக்கச்செய்ய தொழிற்சங்கங்கள் முன்வரவேண்டும்.

இந்தச் செயலைக் கண்டித்து எமது ஊழியர் சங்க அங்கத்தவர்கள் நேற்று நண்பகல் 1 30 மணியளவில் இருந்து கடமைகளை பகிஷ்கரித்து வருகின்றனர்.

-இவ்வாறு அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-7)

ஆஸ்பத்திரி போராட்டத்திற்கு ஈழவர் முன்னணி ஆதரவு

யாழ்ப்பாணம், மே 6 யாழ் ஆஸ்பத்திரியை மூடிவிடுமாறு அரசு விடுத்த காலக்கெடுவை வாபஸ் பெறும்வரை நோயாளர் நலன்புரிச் சங்கம் நடத்திவரும் போராட்டத்துக்கு ஈழவர் முன்னணி ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளது.

அரசின் இக் கொடூரமான நடவடிக்கையைக் கண்டிக்கும் பொருட்டு அரசுக்கு எதிர்ப்பைத் தெரிவிக்குமாறும் ஈழவர் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஈழவர் முன்னணி விடுத்த அறிக்கை ஒன்றிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை ஸ்ரீலங்கா அரசின் கட்டளைக்கும் ஈழவர் முன்னணி வன்மையாகக் கண்டனம் தெரிவித்துள்ளது.

மீள்பரிசீலனை செய்ய அரசிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 6 யாழ் போதனா ஆஸ்பத்திரியை மூடிவிடுவது என்ற முடிவை அப்பாவி மக்கள், நோயாளர் நலன் கருதி மீள்பரிசீலனை செய்க!

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் போதனா வைத்தியசாலை அமைச்சருக்கு அனுப்பிய மகஜரில் மேற்கண்டவாறு கோரியுள்ளனர்.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஊடாக இந்த மகஜர் அனுப்பப்பட்டுள்ளது. அதில் கூறப்பட்டிருப்பதாவது:

ஆஸ்பத்திரியை மூடுவது என்ற தீர்மானம் மனிதாபிமானம் அற்றது. இதனால் அப்பாவி மக்கள் முறையான சிகிச்சை பெற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

கோட்டை இராணுவ முகாமில் இருந்த ஷெல்களுக்கு எட்டு முறை இந்த ஆஸ்பத்திரி இலக்கானது. இருந்தும் மக்கள் சிகிச்சை பெற இந்த ஆஸ்பத்திரியையே தேடி வரவேண்டி இருந்தது. காரணம் இங்குள்ள வசதிக்கு வேறு வைத்தியசாலை இல்லாமையே.

போதனா ஆஸ்பத்திரி இன்றி வைத்தியப் படிப்பை தொடருவதில் பிரயோசனம் இல்லை.

இதனால் வைத்திய பீட நிர்வாகம், வைத்தியப் படிப்பை நிறுத்துவது என்று முடிவு செய்துள்ளது.

இது எம்மை விரக்தி நிலைக்குத் தள்ளியுள்ளது.

இப்படி மகஜரில் கூறப்பட்டுள்ளது. (உ-எ)

ஜே.வி.பி.உறுப்பினர்கள் 500 பேர் கைது!

கொழும்பு, மே 6 ஐந்நூறுக்கும் அதிகமான ஜே. வி. பி. உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு, காலி, இரத்தினபுரி, குருணாகல், மத்துகம, மாத்தறை, மொனராகலை, பதுளை, ஹொரணை, [illegible] கோட்டே, கண்டி ஆகிய இடங்களிலேயே பெரும்பாலானோர் கைது செய்யப்பட்டனர்.

மொனராகலையில் வைத்துக் கைது செய்யப்பட்ட ஒரு சந்தேகநபர், முக்கிய தகவல்களை பொலிஸாருக்கு தெரிவித்தார் என்று அறிவிக்கப்படுகிறது.

இராணுவ முகாம்களைத் தாக்குவதற்குத் தேவையான ஆயுதங்களை வெடிமருந்துகளைச் சேகரிப்பதில் ஜே. வி. பி. தற்போது ஈடுபட்டுள்ளதாக அச்சந்தேக நபர் தெரிவித்தாராம். (உ-எ)

ஆஸ்பத்திரியை மூடக்கூடாதென எதிர்ப்பு ஊர்வலம் சென்ற ஆஸ்பத்திரி ஊழியர்களும் பொதுமக்களும் அரச அதிபரின் வருகைக்காக எதிர்பார்த்து செயலக வாசலில் காத்து நிற்க நேரிட்டது.

ஆஸ்பத்திரியை மூடும் உத்தரவைக் கண்டித்து அரச அலுவலகங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன. அதே வேளை செயலகமும் மூடப்பட்டிருந்தது. ஊர்வலக்காரர்கள், அரச அதிபர் அழைக்கப்பட்டு வரும்வரை வெளியே காத்து நின்றனர். அப்போது எடுக்கப்பட்ட படத்தையே மேலே காண்கிறீர்கள். (படம்: ஜெயம்)

முல்லைத்தீவில்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மற்றவரின் பெயர் தெரியவில்லை.

அத்துலத் ஆசீஸ் சாலி (வயது 16) என்ற முஸ்லிம் இளைஞர் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மரணமான கணபதிப்பிள்ளையின் சடலம் யாழ் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (இ-10)

ராஜீவின்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தாக எண்ணவைத்தது.

ராஜீவ் காந்தியின் நிர்வாகம் முகங்கொடுக்க வேண்டிய உள்ளகப் பிரச்சினைகளின் மத்தியிலும்—அதன் நம்பிக்கை— நம்பகத்தன்மை ஆகியவை எதிர்நோக்கும் அபாயத்தின் மத்தியிலும்-- இனப் பிரச்சினை இந்திய அரசின் முன்னுரிமை பெறுமிருப்பது [illegible] புரிந்து கொள்ளக்கூடியதே.

நம்பிக்கையூட்டும் மக்களுடன் தம்மைப் பிணைத்துக் கொள்ளும் ஒரு கொள்கைக் கோட்பாடு இன்மை- விரைவுத் தீர்வு எண்ணக்கரு மேலெழுந்தவாரியாகவும், திறமையின்றி எடுத்த முயற்சிகள்-- மத்தியஸ்த முயற்சியில் அடிப்படை யதார்த்த வழிகாட்டல் இன்மை தொடர்ந்து செல்ல வேண்டிய முக்கிய திசை தெரியாமை ஆகிய இவைதான் இலங்கைபால் ராஜீவ் காந்தி கடைப்பிடிக்கும் கொள்கைக்கு இந்தியாவைக் கொண்டுவந்துள்ளன என்பது தெளிவு.

(தொடரும்)

விசேட குழு...

(10-ம் பக்கத்தொடர்ச்சி)

குறித்தும் உபகரணங்களை இடம் மாற்றுவதால் உண்டாகக் கூடிய சங்கடங்களையும் தூதுக்குழுவினர் எடுத்துரைப்பர்.

யாழ் அரசாங்க அதிபர் திரு வை மு. பஞ்சலிங்கம், யாழ் ஆஸ்பத்திரி பணிப்பாளர் டாக்டர் எஸ் நச்சினார்க்கினியன் யாழ் பல்கலைக்கழக மருத்துவப் பீடத் தலைவர் பேராசிரியர் சிவஞானசுந்தரம், அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்க யாழ் கிளைத் தலைவர் டாக்டர் எஸ். இலகுமாரன், பிரஜைகள் ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதிநிதி ஒருவர் ஆகியோர் விசேட குழுவில் அங்கம் வகிப்பர்.

கண்டன ஊர்வலம்

இதே வேளை—

யாழ் ஆஸ்பத்திரியை மூட வேண்டும் என்ற அரசின் உத்தரவைக் கண்டித்தும், அதனை வாபஸ் பெறக்கோரியும் ஆயிரக்கணக்கான பொதுமக்களும் ஆஸ்பத்திரி ஊழியர்களும் நேற்று முற்பகல் மௌன ஊர்வலம் நடத்தினர்.

யாழ். ஆஸ்பத்திரி தாதியர் பயிற்சிப் பாடசாலையில் இருந்து ஆரம்பமான இந்த ஊர்வலம் ஆஸ்பத்திரி வீதி, கண்டி வீதி ஊடாகச் சென்று யாழ். செயலகத்தை அடைந்தது.

வைத்தியசாலை பணிப்பாளர் உட்பட வைத்திய அதிகாரிகள் ஊர்வலத்தின் முன்னே செல்ல ஆயிரக்கணக்கான பொதுமக்களும் ஊழியர்களும் நீண்ட ஊர்வலத்தில் பங்குபற்றினர்.

ஊர்வலம் நண்பகல் அளவில் யாழ் செயலகத்தை அடைந்தது. ஆஸ்பத்திரி மூடப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து செயலகம் மூடப்பட்டிருந்ததன் காரணமாகவும், யாழ் அரச அதிபர் அங்கு இல்லாததன் காரணமாகவும் பொதுமக்களும் ஊழியர்களும் சுமார் ஒருமணி நேரமாக செயலக வாசலில் நின்றனர்.

அரச அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் செயலகத்துக்கு அழைத்துவரப்பட்டார். அதை அடுத்து யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளரினால் மகஜர் ஒன்று அவரிடம் கையளிக்கப்பட்டது.

அரசின் உத்தரவை அரசாங்க அதிபர் வாபஸ் பெறச் செய்விக்கவேண்டும். இல்லையேல் அவர் பதவி விலக வேண்டும் என்று ஊர்வலத்தில் வந்த சிலர் கோஷம் எழுப்பினர்.

மகஜர் கையளிக்கப்பட்ட பின்னர் வைத்திய அதிகாரிகள் அரச அதிபர் கலந்து கொண்ட மாநாடு ஒன்றும் செயலகத்தில் நடைபெற்றது.

வானின் ----

(10-பக்கத் தொடர்ச்சி)

யப் பயணிகள் கைகளை அசைத்து சத்தமிட்டுக் கூறினர். எனினும் ஹெலிகொப்டர் தாக்கிவிட்டுப் பறந்து சென்றுவிட்டது.

மரணமானவர்கள் அச்சுவேலியைச் சேர்ந்த சின்னத்தம்பி பாக்கியராசா (வயது 60) நாவற்துறையைச் சேர்ந்த பிலிப் அன்ரன் (வயது 16)

காயமடைந்த இருவர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்

மினிவானின் கரையில் இருந்து சென்றவரோ [illegible] ஹெலிகொப்டரில் வந்தவர்களுக்கு பயங்கரவாதியாகத் தோன்றினாரோ?

கோப்பாய் - கைதடி பாலத்தில் ஹெலிச் சூட்டுக்கு நேற்றுப் பலியான சின்னத்தம்பி பாக்கியராசாவின் சடலம் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருக்கிறது (படம்: ஜெயம்)

யாழ் ஆஸ்பத்திரி நோயாளர் பருத்தித்துறை--தெல்லிப்பளை ஆஸ்பத்திரிகளுக்கு இடமாற்றம்

அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, மே 6 யாழ் போதனா ஆஸ்பத்திரியை இம்மாதம் 8 ஆம் திகதியுடன் தற்காலிகமாக மூடிவிட்டு பருத்தித்துறை ஆதார ஆஸ்பத்திரி, தெல்லிப்பளை, மானிப்பாய் ஆஸ்பத்திரி ஆகியவற்றுக்கு நோயாளர்கள் இடம் மாற்றம் செய்யப்படுவர் என்று அரசு அறிவித்துள்ளது. தளபாடங்களும் மேற்கண்ட ஆஸ்பத்திரிகளுக்கு மாற்றப்படுமாம்.

நோயாளர்களைப் பராமரிக்க மானிப்பாய் கிறீன் ஆஸ்பத்திரியுடன் ஒழுங்குகள் செய்து கொள்ள அரசு விரும்புவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரியை இடமாற்றம் செய்வதால் ஏற்படும் அசௌகரியங்களை எப்படிக் குறைக்கலாம் என்பதுபற்றி யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடமிருந்து ஆலோசனைகளை அமைச்சு எதிர்பார்ப்பதாகவும் இலங்கை வானொலி நேற்று அறிவித்தது. (இ-எ)

கிளர்ச்சி நடத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செயற்படுவதே ஜே.வி. பியினரின் திட்டம்.

அண்மையில் மே தினம் அன்று தாயகம் காக்கும் இயக்கம் நடத்திய கூட்டம் ஜே வி பியினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது

ஜே வி பி நாட்டைக் கைப்பிடிக்கும் முயற்சியில் இயங்கி வருகிறது

எம். பிக்கள் தங்கள் தொகுதிகளில் ஜே. வி பியின் நடமாட்டம் குறித்து கண்காணிப்புடன் செயற்பட வேண்டும்.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனா தெரிவித்தார்

அரசபடைகளுக்கு ஆட்திரட்டும்போது விண்ணப்பங்கள் தீவிரமாக பரிசீலனை செய்யப்படவேண்டும்; வேண்டுமானால் தனியார் துப்பறியும் ஸ்தாபனத்தின் உதவியும் நாடப்படவேண்டும்—

இப்படி அரச எம். பிக்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர். (இ எ)

கடமையிலிருந்து திரும்புகையில்

தமிழ் பொலீஸ மீது கோட்டையிலிருந்து சிப்பாய்கள் சூடு!

யாழ்ப்பாணம், ஏப் 6 பொலீஸ் அத்தியட்சரின் கட்டளையுடன் கடமைக்கு வந்த தமிழ் பொலீஸர் ஒருவர் கடமை முடிந்து திரும்புகையில் சிப்பாய்களின் சூட்டுக்கு இலக்கானார்.

நேற்று பிற்பகல் இரண்டு மணி அளவில் [illegible] அருகே இச்சம்பவம் நடைபெற்றது

கடமை முடிந்து நேற்று மதியம் திரும்பி வருகையில் கோட்டையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக பொலீஸ் கான்ஸ்டபிள் சபாபதிப்பிள்ளை (வயது 49) காயமடைந்து நிலத்தில் வீழ்ந்தார்.

(இ-10)

அரசு நடந்து கொண்ட விதம் கண்டிக்கத்தக்கது

யாழ் பெரியாஸ்பத்திரி மூடுவிழா குறித்து அரச அதிபர்

யாழ்ப்பாணம், மே 6 அரசாங்கம் எம்மோடு எவ்விதத்திலும் கலந்தாலோசிக்காமல் யாழ் பெரியாஸ்பத்திரியை மூட உத்தரவிட்டது கண்டிக்கத்தக்கது

யாழ் அரசாங்க அதிபர் திரு எம் பஞ்சலிங்கம் நேற்று செயலகத்தில் ஆஸ்பத்திரி உத்தியோகத்தர்கள் மத்தியில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் அங்கு பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ் ஆஸ்பத்திரியை எதுவித ஆலோசனையும் இல்லாமல் மூட உத்தரவிட்டவர்கள் நாளை யாழ் செயலகத்தையும் ஏனைய அரச அலுவலகங்களையும் மூடுவதற்கு உத்தரவிடலாம்.

யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு போதனா வைத்தியசாலைக்கு அமைச்சு அனுப்பிவைத்துள்ள இரண்டுவரிக் கடிதத்தைக் கண்டு நான் ஆச்சரியமடைகிறேன்

யாழ்ப்பாணத்தில் மின்சார சபை, வைத்தியசாலை, செயலகம் என்பன தான் அரச ஸ்தாபனங்களாக விளங்கி வருகின்றன.

தற்போது ஆஸ்பத்திரி மீது கைவைக்கப்பட்டுள்ளது எனவே இதனை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இப்படி அவர் கூறினார். (இ-10)

அரச அலுவல - -

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

களும் நிறுத்தப்பட்டிருந்தன

கோட்டை முகாமில் இருந்து வழமைபோல் ஷெல் அடிகளும் துப்பாக்கிப் பிரயோகங்களும் நடத்தப்பட்டன

ஸ்ரீ லங்கா அரசு ஆஸ்பத்திரி மீதான உத்தரவை வாபஸ் பெறும் வரை சகல அரச அலுவலகங்களும் பகிஷ்கரிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

இடம் மாற்றம்
34, செட்டித் தெரு லேன்,
நல்லூர்.
(நல்லூர் கோவிலுக்கு முன்பாக பருத்தித்துறை வீதியில் ஆரம்பமாகும் செட்டித் தெரு)
வாடிக்கையாளரின் வசதிகருதி இந்த விலாசத்துக்கு
ரவி அன் ராஜ் சில்க்
தற்காலிகமாக மாற்றப்பட்டுள்ளது. திருமண வைபவங்களுக்கு வேண்டிய சேலைகள் மற்றும் ஜவுளி வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம். (1305)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15, ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி 06 - 05 - 1987 தொலைபேசி இல. 24805 , 23078
Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA
Registered as a Newspaper at the General Post Office Under Number QJ / 94 / N/87 Telephone, 24805, 23078